**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள் – 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டம் – 2015–16 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.27,07,500/– நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண் 25**

**நாள்: 02.03.2016**
**மன்மத–மாசி 19**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.07.2014.
2. அரசாணை (நிலை) எண்.45, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13.08.2014.
3. அரசாணை (நிலை) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை (மாதிந.1) துறை, நாள் 12.06.2015.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.4009/சிபதி/2015, நாள் 08.07.2015.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன், 2014–2015 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்க, ரூ.2.25,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.25,17,500/–ஐ, 2014–15 ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மார்ச்/ஏப்ரல் 2014ல் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், 2014–15 ஆம் நிதியாண்டு முடிவடைந்துள்ள நிலையில் 2015–16 ஆம் நிதியாண்டில் ரூ.27,82,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், 2015–16 ஆம் நிதியாண்டில், மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க ரூ.27,07,500/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று, அரசு பொதுத் தேர்வில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க, 2015–16 ஆம் நிதியாண்டிற்கு, ரூ.27,07,500/– (ரூபாய் இருபத்தேழு இலட்சத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR-காது கேளாதோர் பள்ளிகள் – 59–பரிசுகளும், வெகுமதிகளும்**

**(து.தொ.கு.2235–02–101–AR-5900).**

7. இச்செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் தொகை 2015–2016ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சார் எண் 11289/நிதி(சந)/2016, நாள் 01.03.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)

**நகல்:**
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.